# செய்தி வெளியீடு

## போலி குடும்ப அட்டைகள் களையும் பணி உண்மையான குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு

தமிழ்நாட்டில் 1,98,90,565 குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொருட்கள் பெற்று வருகின்றனர், இந்த குடும்ப அட்டைகளில் சுமார் 7 சதவீதம் வரை போலி அட்டைகள் இருக்கலாம் என்பதை தொகுதிக்கு ஒரு கடை எடுக்கப்பட்டு 100 சதவீதம் தணிக்கை செய்த முன்னோடி ஆய்வில் கண்டறியப்பட்டது.

இந்த ஆய்வின் அடிப்படையில் முதல்கட்டமாக சென்னை அண்ணாநகர் மண்டலம் மற்றும் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் புழக்கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் 100 சதவீதம் வீடுவீடாக சென்று ஆய்வு செய்து போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு ரத்து செய்யப்பட்டன.

அடுத்தக்கட்டமாக வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, கரூர், நாமக்கல், கடலூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் புழக்கத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைகளும் 100 சதவீதம் ஆய்வு செய்யப்பட்டு கண்டறியப்பட்ட போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்படும் நிலையில் உள்ளன.

மூன்றாவது கட்டமாக மேலும் 14 மாவட்டங்களிலும் நான்காம் கட்டமாக மீதமுள்ள 5 மாவட்டங்களிலும் சென்னை நகரில் 15 மண்டங்களிலும் வீடுவீடாக சென்று குடும்ப அட்டைகளை ஆய்வு செய்யும் பணி நிறைவுபெறும் நிலையில் உள்ளது. இந்த கள ஆய்வுப்பணி நவம்பர் இறுதிக்குள் முழுமையாக முடிக்கப்படும்.

ஆயிரக்கணக்கான பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இப்பணியில் களப்பணியாளர்களின் கவனக்குறைவாலோ அல்லது வேறுகாரணங்களாலோ உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் யாரும் பாதித்துவிடக்கூடாது என அரசு கருதுவதால் பல்வேறு கட்டங்களில் இப்பணியால் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்கள் மேல்முறையீடு செய்யவும் அத்தகைய குடும்பங்களுக்கு பொருட்கள் தடையின்றி வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மூன்றாவது மற்றும் நான்காவது கட்ட பணிகள் நடைபெற்று வரும் மாவட்டங்களில் விரைவில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் போலி என சந்தேகிக்கப்படும் குடும்ப அட்டைகளின் பட்டியல் ஒட்டப்படும். இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்கள் முகவரி மாற்றம் செய்திருந்தாலோ அல்லது வேறு காரணங்களுக்காக இந்த பட்டியலில் இடம் பெற்று இருந்தாலோ அவர்கள் அந்தந்த நியாயவிலைக் கடையிலேயே இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பித்தினை பெற்று குடியிருப்பு ஆதாரத்திற்கான ஆவணங்களுடன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து அளித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு ஒப்புதல் பெற்று கொள்ளும் குடும்ப அட்டைதாரர்கள் தொடர்ந்து பொருட்கள் பெற்றுக் கொள்ளலாம். இவர்களது மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து பொருள் வழங்க ஆணையிடப்படும். தகுதியற்றவர்களின் குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்படும்.

**உரிய காலத்திற்குள் நியாயவிலைக் கடையில் முறையீடு செய்துகொள்ள இயலாதவர்களுக்கும், பொருள் நிறுத்தம் செய்யப்பட்டவர்களுக்கும் மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். இதன்படி குடும்ப அட்டைகள் பொருள் நிறுத்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சென்னை நகரில் சம்மந்தப்பட்ட துணை ஆணையாளர்களுக்கும், மாவட்டங்களில் மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கும் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். மேல்முறையீடு மனுக்கள் விரைவாக விசாரணை செய்யப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு மீண்டும் பொருள் வழங்க ஆணையிடப்படும்.**

**இவ்வாறு குடும்ப அட்டைகள் 100 சதவீதம் வீடுவீடாக தணிக்கை செய்யும் பணியின் காரணமாக உண்மையில் வசிக்கும் எந்த ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் எந்த நிலையிலும் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் பொருள் வழங்கல் நிறுத்தம் செய்யும் முன்பாகவும் பொருள் நிறுத்தம் செய்யப்பட்டு குடும்ப அட்டை ரத்து செய்யப்பட்ட நிலையிலும் உரிய அலுவலர்களுக்கு முறையீடு மற்றும் மேல்முறையீடு செய்து கொள்ளவும் வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் மட்டும் இவ்வாறு சந்தேகத்திற்குரிய குடும்ப அட்டைகள் விவரம் உணவுப்பொருள் வழங்கல் துறையின் இணையதளம் மூலம் வெளியிடப்படும். இந்த இணையதள முகவரி செய்தித் தாள்களின் மூலம் தெரிவிக்கப்படும். இதன் மூலம் குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை நிலைபற்றி இணையதளத்தில் நேரடியாக தெரிந்து கொள்ளலாம்.**

**உண்மையான குடும்ப அட்டைகள் வைத்திருக்கும் எவரும் குடும்ப அட்டைகள் தணிக்கையின்றி ரத்து செய்யப்பட்டுவிடும் என அஞ்சத்தேவையில்லை. மேலும் இது குறித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு சிரமங்கள் ஏதேனும் ஏற்படின் சம்மந்தப்பட்ட மாவட்ட வழங்கல் அலுவலருக்கும் மாநில நுகர்வோர் உதவி மையம் தொலைபேசி எண். 044-28592828 மற்றும் மாண்புமிகு உணவு அமைச்சர் அலுவலக தொலைபேசி எண். 044–25670204க்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9